கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2026ம் வருடம் ஜூன் மாதம் 06ம் நாள் சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.8/2026
இன்
அசல் வழக்கு எண்.158/2015
----

1) அழகர்
2) வாணி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

சுந்தர் (இறப்பு) ... 1ம் பிரதிவாதி

பாஸ்கர் ... எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதி

இறுதியாக இம்மனுவானது 01.06.2026ல் இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.கோகுலகண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட

நிலையில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கின் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17ன் மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்து இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**3) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**

இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்கள்/வாதிகள் தங்களது மனுவில், அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்திற்கும், பிரதிவாதிகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்றும், ஆயினும் Ex.X5 வெளிச்சத்திற்கு வந்ததால் இந்தநிர் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோருவது சட்டப்படி தேவையான ஒன்று என்றும், மேலும் தாவா சொத்தின் சொத்து விவரத்தில் விஸ்தீரணத்தை பொறுத்து திருத்தம் செய்ய வேண்டும் என்றும், வழக்குரையில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கானது கடந்த 2015 முதல் நிலுவையில் இருந்து வருவதாகவும், அசல் வழக்கானது இருதரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வரும் நிலையில், இந்த சீர்திருத்த மனுவானது நீதிமன்ற கால நேரத்தை வீரயம் செய்யும்விதமாகவும், அசல் வழக்கு விசாரணையை காலம் கடத்தும்விதமாகவும் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சீர்திருத்த விவரங்களை பொறுத்து அது வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்றும், எனவே, இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

3.3) இந்நிலையில், அசல் வழக்கானது கடந்த 2015 முதல் நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கானது இருதரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வரும் நிலையிலும், இம்மனுவானது அசல் வழக்கு நடவடிக்கைகளை காலம்கடத்தும்விதமாகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறிய வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சீர்திருத்த விவரங்களை பொறுத்து அது வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்ற நிலையிலும், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 06ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.06 12:14:51 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

<u>இணைப்பு:</u>

1) மனுதாரர் தரப்பு சாட்சிகள் :- இல்லை.
2) மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை.
3) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:- இல்லை.
4) எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றவாணங்கள் :- இல்லை.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.06.06 12:15:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.8/2026
இன்
அசல் வழக்கு எண்.158/2015
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 06.06.2026